தூரத்திலுள்ள ஜொல்லூத்து கிராமங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அல்ல, *118* குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது நடமாடும் ஊர்திமூலம் குடிமைப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டு, பிரதி மாதம் முதல் வாரத்தில் செவ்வாய்க்கிழமைகளில் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைக்கப்படின், அந்தத் தாய்க் கடையில் *438* அட்டைகள் மட்டுமே எஞ்சியிருக்கும். இருப்பினும் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, நிச்சயமாகப் பகுதிநேரக் கடை அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *84*, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

84—

பன்முக மருத்துவமனை

***6441—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பெருந்துறை வட்டத்தில் அனைத்து வசதிகளுடன் *24* மணி நேரமும் இயங்கும் கால்நடை பன்முக மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெருந்துறை தொகுதி, பெருந்துறை வட்டத்தில் ஒரு கால்நடை பன்முக மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறு உள்ளது.

(ஆ) முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

2011 செப்டம்பர் 5]

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை தொகுதி, பெருந்துறை வட்டத்திலே ஒரு கால்நடை பன்முக மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறு உள்ளதென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். மனிதர்களால் சத்தற்றதென ஒதுக்கப்படுகின்ற வைக்கோல், தவிடு, பிண்ணாக்கு போன்றவற்றை உணவாக எடுத்துக்கொண்டு, மனிதனுடைய உணவுத் திட்டத்திலே சத்தான பங்கு வகிக்கின்ற பாலைத் தருகின்ற பசு, நன்றிக்கு எடுத்துக்காட்டான நாய் உள்ளிட்ட வாயில்லா ஜீவராசிகள்மேல் இரக்கம்கொண்ட வள்ளலாரைப்போல, கோமாதாவின் நோய் தீர்க்கும் கருணைத் தாயாக, பெருந்துறையில் 24 மணி நேர கால்நடை மருத்துவமனை உருவாக இசைவளித்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அந்த ஜீவராசிகளுக்கு மட்டும் வாய் இருந்தால், 'சத்தியம் நீயே, தர்மத் தாயே, குழந்தை வடிவே, தெய்வ மகளே!' என நன்றியுடன் வாழ்த்தி மகிழும். (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றின் சார்பாகவும், பெருந்துறை தொகுதி மக்களுடைய சார்பாகவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதங்களிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, எந்த அடிப்படையிலே இந்த மருத்துவமனையை அமைக்கப்படுகிறது, அந்தத் திட்டம் எப்பொழுது தொடங்கப்படுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, மருத்துவக் கிளை நிலையங்கள், மருந்தகங்கள், மருத்துவமனைகள், பன்முக மருத்துவமனைகள் இவையெல்லாம் அமைக்கப்படவேண்டுமென்று சொன்னால், அதற்கு கால்நடை பராமரிப்புத் துறையில் பல விதிமுறைகள் இருக்கின்றன. குறிப்பாக, கிளை நிலையங்கள் அமைக்கின்றபோது அந்தந்தப் பகுதியில் எண்ணிக்கை 3,000 கால்நடைகளுக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

மருந்தகமாக அமைக்கபடவேண்டுமென்று சொன்னால் அந்தப் பகுதியிலே 5 ஆயிரம் கால்நடைகளுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். அப்படிப் புதிய கிளை நிலையங்கள் அமைக்கப்படுகின்றபோது, குறிப்பிட்ட எண்ணிக்கை அடிப்படையில் இல்லையென்று சொன்னால் ஒரு கிளை நிலையத்திலிருந்து அடுத்த கிளை நிலையத்திற்கு 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும். மருந்தகம் அமைக்கப்படவேண்டுமென்று சொன்னால் அந்தக் கிளை நிலையத்திலிருந்து மருந்தகத்திற்கு 8 கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும். அதனடிப்படையிலே, மருத்துவமனை அமைக்கவேண்டுமென்று சொன்னால் அந்த மருந்தகத்திற்கு அதிக கால்நடைகள் வர வேண்டும். குறிப்பாக, அந்த மருந்தகத்திற்கு நாற்பதிலிருந்து அறுபதுக்கும் மேற்பட்ட கால்நடைகள் தினமும் வர வேண்டும். அதனடிப்படையில்தான் கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள், மருத்துவமனைகள் அமைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெருந்துறையில் பன்முக மருத்துவமனை அமைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார். சாத்தியக் கூறுகள் இருக்கின்ற காரணத்தால், நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு உடனடியாக செயல்படுத்தப்படுமென்று அறிவித்துள்ளது.

இந்தப் பகுதியில், பன்முக மருத்துவமனை அமைக்கின்றபோது, பெருந்துறையைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றியத்தில் 11 கால்நடை மருத்துவமனைகள், 6 கால்நடை மருந்தகங்கள், 5 தரம் உயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையங்கள், ஒரு கால்நடை நிலையம், இப்படி அனைத்து வசதிகளும் இருந்தாலும் இதய தெய்வம், அம்மா அவர்களின் அரசில் இந்த நிதியாண்டிலேயே அது துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள், ஏற்கெனவே தனது பெருந்துறை தொகுதியில் ஓர் அரசு பாலிடெக்னிக் அமைத்துத் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அதை நான் கனிவுடன் பரிசீலித்து அதற்கு முன்னுரிமை கொடுத்து

2011 செப்டம்பர் 5]

நிறைவேற்றித் தரலாமென்று இருந்தேன். அதற்குள் அவர் இப்போது, பெருந்துறை தொகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய 24 மணி நேரமும் இயங்கும் பன்முக கால்நடை மருத்துவமனை அமைக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார். அவருக்கு பாலிடெக்னிக் வேண்டுமா? இந்த மருத்துவமனை வேண்டுமா? எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று அவரே முடிவு செய்து சொன்னால் அதற்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: கருணைத் தாயாக விளங்கிக் கொண்டிருக்கின்ற, வாழ்கின்ற வள்ளலாக இருந்து எங்களைக் காத்து வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களே, எங்களுடைய பெருந்துறை தொகுதி மக்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்மீது என்றைக்கும் தீராத விசுவாசம் கொண்டவர்கள், அம்மாவினுடைய கருணைப் பார்வையை நோக்கியிருக்கின்ற காரணத்தினாலே தாயுள்ளத்தோடு அம்மா அவர்கள் இந்த இரண்டு திட்டங்களையும் வழங்கி அருளவேண்டுமாய் அம்மா அவர்களுடைய பாதங்களில் வைத்து, என் கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

மாண்புமிகு முதலமைச்சர் தனது சொத்துக் கணக்கை வெளியிடாதது போன்று பத்திரிகை ஒன்றில் வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய ஆங்கில நாளிதழ் ஒன்று காலைப்